**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | **: CC. 08/2017.** |
| **Miscellaneous** | **:** |
| **Summary Trial** | **:** |
| **Maintenance** | **:** |
| **Deposition of witness for prosecution** | **: PW.13 முகமதுரபீக்** |
| **Fathers Name/Husband Name** | **: தாஸ்தின்** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.10.2022

-------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

1. நான் தொட்டப்பநாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு அரசு தரப்பு சாட்சிகளான எங்கள் ஊர்காரர்களான ஜெயபிரகாஸ், சூரியபிரபு, சின்னசாமி, சந்திரசேகர் ஆகியோர்களை எனக்கு தெரியும். நான் தொட்டப்பநாயக்கனூர் மெயின்ரோட்டில் டூவீலர் ஒர்க்சாப் நடத்தி வருகிறேன். சாட்சி சந்திரசேகரன் ரைஸ் மில்லில் வேலை பார்த்து வந்தார். அன்றையதினம் காலை 11.00 மணியளவில் நான் எனது ஒர்க்சாப்பில் இருந்தபோது சத்தம் கேட்டு நான் பார்த்தேன்.

2. பூ ஏற்றிக்கொண்டு ஆண்டிபட்டியில் இருந்து உசிலம்பட்டி நோக்கி வந்த பிக் அப் வண்டி ஜான்ட் கட்டாகி கீழே விழுந்து கிடந்தது. 4 பேர் அதில் இருந்து கீழே விழுந்துவிட்டார்கள். கீழே விழுந்தவர்கள் மீது எதிர்திசையில் வந்த லாரி ஏறியதில் 4 பேரும் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார்கள். என்னுடன் சாட்சி சந்திரசேகரன் மற்றும் மேலே குறிப்பிட்ட சாட்சிகள் இருந்தார்கள். நாங்கள் உடனே

ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்கள். லாரி டிரைவர் வெளியே வரமுடியாதபடி அவரது பக்கம் லாரி சேதமாகி உள்ளே உட்கார்ந்தபடியே இருந்தார். அதன்பின்பு நாங்கள் கம்பியை வளைத்து அவரை வெளியே கொண்டுவந்தோம். அவர் பெயர் தெரியவில்லை. சம்பவம் நடந்து 6 வருடம் ஆகிவிட்டதால் எதிரி முகம் நினைவில் இல்லை. போலீசார் விபத்து நடந்தது குறித்து என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** முதல் விசாரணையில் எதிரியானவர் லாரியில் இருந்து இறங்கமுடியாத அளவிற்கு லாரி சேதம் அடைந்து இருந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் இடத்தில் இருந்து சுமார் 200 அடி மேற்கு பக்கம் தள்ளி நான் கடை வைத்துள்ளேன். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை, சத்தம் கேட்டு சென்றுதான் பார்த்தேன். பூ ஏற்றி வந்த வண்டியில் வந்த அனைவரும் ரோட்டின் தென்புறம் கிடந்தார்கள் என்றால் சரிதான்.

S.d./ Mohamadhurafeek

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.